# இந்துப் பண்பாட்டுச் சுற்றுலாவில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம்

கீதாஞ்சலி.த[1]
அபிராமி.சூ[2]

**ஆய்வுச்சுருக்கம்**

ஈழ நாடானது பல்வேறுபட்ட கலாசார மரபுரிமைகளையும் பண்பாட்டுச் சிறப்பினையும் கொண்டு விளங்குவதோடு பண்பாட்டுச் சுற்றுலாவில் அதிக வருமானத்தைத் தருகின்ற ஒரு நாடாக விளங்குகின்றது. பண்பாட்டுச் சுற்றுலா எனப்படுவது 'சுற்றுலாப்பயணிகள் விடுமுறை மற்றும் விழாக்காலங்களில் அருகில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்குச் சென்று, தாங்கள் விரும்பும் நண்பர்கள் உறவினர்களிடையே கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்வர். இவ்வகை மகிழ்ச்சி தரும் சுற்றுலாக்கள்' பண்பாட்டுச் சுற்றுலா எனப்படும். ஈழத்தின் பண்பாட்டுச் சுற்றுலாவில் ஒரு மைல்கல்லாக செல்வச்சந்நிதி ஆலயம் காணப்படுகின்றது. செல்வச்சந்நிதி ஆலயமானது இந்துப் பண்பாட்டுச் சுற்றுலாவில் பெறுகின்ற முக்கியத்துவம் குறித்த தேடலாகவும் ஆலயத்தின் பண்பாட்டுச் சுற்றுலா வளர்ச்சியில் இருக்கும் தடைகளை இனங்காணும் நோக்குடனும் இத்தலத்தை சுற்றுலாவிற்கான களமாக மேம்படுத்துவதற்கான உபாயங்களை இனங்காணுதல் பற்றியதாகவும் இந்த ஆய்வு அமைகின்றது. வரலாற்று நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் நேர்காணல் ஊடாகவும் தரவுகள் சேகரிக்கப்பட்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இத்தலமானது ஐராவசு சாப விமோசனம் பெற்ற தலமாகவும் சிகண்டி முனிவர் வழிபட்டுப் பேறுபெற்ற ஆலயமாகவும் தொண்டை மான் கருணாகரன் திருப்பணி செய்த கோவிலாகவும் தொன்மச்சிறப்புகளோடு திகழ்கிறது. செல்வச் சந்நிதி ஆலயத்தை நோக்கி சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதற்குரிய முக்கிய அம்சங்களாக அவ்வாலயத்தின் தலவிருட்சம், தீர்த்தச்சிறப்பு, சித்தர்மரபு, பாதயாத்திரை, உற்சவங்கள், நிவர்த்திக்கடன் மற்றும் பாரம்பரிய உணவுகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இந்த ஆலயத்தினைப் பண்பாட்டுச் சுற்றுலாத்தளம் என்ற முழுமையான அடையாளப்படுத்துகையைச் செய்வதற்குச் சில மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆலயத்தின் தீர்த்தக் கரையினைப் புனரமைத்தல், திண்மக்கழிவு முகாமைத்துவத்தைச் சீரமைத்தல், ஆலய வீதிகளைப் புனரமைத்தல், பாதுகாப்பினைப் பலப்படுத்துதல், தங்குமிடவசதி போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பண்பாட்டுச் சுற்றுலாவில் முழுமைத்துவமாக செல்வச்சந்நிதி ஆலயத்தை மேம்படுத்த முடியும். ஆலயத்திற்கு அதிகளவான பயணிகள் வருகை தருவதனால் பொருளாதாரம் மேம்பாடடை வதோடு ஆலயத்தின் ஊடாக சமூகத்திற்கு பல்வேறு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏராளமான ஆன்மீகச் சுற்றுலாத்தலங்கள் இருந்தாலும் செல்வச்சந்நிதி ஆலயத்தின் மகோன்னதம் என்பது தனித்துவமானதாகும். நகரமயமாக்கல் காலங்களில் நகரத்தினை மையப்படுத்தியே சுற்றுலா வளர்ச்சி துரிதப்பட்டிருந்தாலும் செல்வச் சந்நிதி மீதான பார்வை என்பது இன்றும் குறையாமல் உள்ளது. இம்முருகன் ஆலயத்தின் சுற்றுலா வளர்ச்சியில் ஏராளமான சவால்கள் காணப்படுகின்ற போதும் வட பிராந்தியத்தின் வரலாற்று அடையாளமாக இந்த ஆலயம் திகழ்வதுடன் பண்பாட்டுச் சுற்றுலாவில் முக்கியமான தலமாக உள்ளது என்பதை இந்த ஆய்வானது தெளிவுபடுத்துகின்றது.

**திறவுச்சொற்கள்:** இந்துப்பண்பாடு, பண்பாட்டுச்சுற்றுலா, செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், பாரம்பரிய வழிபாடுகள், சுற்றுலா மேம்பாடு.

இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
1. keethanaba1@gmail.com
2. sooriyakumarabiramy1999@gmail.com